

ஒரே கிறிஸ்து இருப்பதால், ஒரு கிறிஸ்து உடலும், ஒரே கிறிஸ்து மணவாளனும் இயேசு கிறிஸ்துவின் ஒரே திருச்சபையும் உண்டு. அவரே தலை, திருச்சபையே உடல். இரண்டும் ஒன்று சேர்ந்ததே "முழு கிறிஸ்து" (புனித அகுஸ்தினார்). அந்த உடலில் பல உறுப்புகள் இருந்தாலும் அது ஒன்றே; அவ்வாறே ஒரே திருச்சபையில் பல்வேறு பல திருச்சபைகள் (மறைமாவட்டங்கள்) உள்ளடங்கியுள்ளன.

திருச்சபையில் இடம் பெற்றிருக்கும் உறுப்பினர்கள் அனைவரும் தூயவர்களாக இருக்க வேண்டும் என்பதால் அது தூயதல்ல. மாறாக திருச்சபையில் செயல்படும் கடவுள் தூயவர். திருச்சபையின் உறுப்பினர்கள் அனைவரும் திருமுழுக்கில் தூய்மைப் பெறுகின்றனர்.

"கத்தோலிக்கம்" என்றால் கிரேக்க மொழியில் அனைத்தும் என்பது பொருள். திருச்சபை கத்தோலிக்கம், ஏனெனில் விசுவாசத்தை அனைவருக்கும் அறிவித்து. அருட்சாதனங்களைப் பராமரித்து அருள்பாலித்து, நற்செய்தியை அனைவருக்கும் அறிவிக்க, திருச்சபையை எல்லா நாடுகளுக்கும் கிறிஸ்து அனுப்பினார் (மத்.28:19; மாற்கு16:15).

அப்போஸ்தலர்களால் திருச்சபை உருவாக்கப்பட்டதால் அது அப்போஸ்தலிக்கம் என அழைக்கப்படுகிறது. அவர்களின் வழிதோற்றல் பாரம்பரியமாக அதனை வழிநடத்தி வருகின்றனது. ✠


*Source:*
- Catehism of the Catholic Church
- Compendium of the Catehism of the Catholic Church
- Youth Catechism



*Edited by:*
Fr. Eugene
*Director of API*

*Email:* apidirectorkl@gmail.com



**INTERNAL CIRCULATION ONLY**



BUL 24/2023

10 & 11 ஜூன் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH


## இயேசுவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:**

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்:
தன்னை அன்பு செய்தல் மற்றும் அடுத்திருப்பவரை அன்பு செய்தல்

மாதாந்திர நிகழ்வு:
இயேசுவின் திரு இருதயம் & அன்னை மரியாவின் மாசற்ற இருதயம்



# ஒரே, தூய, கத்தோலிக்க, அப்போஸ்தலிக்கம் என்றால் என்ன?